# நடைமுறைக்கு வரும் புதிய விதிமுறைகள்

மாவீரர் வெற்றிக்கிண்ணம், தமிழீழக்கிண்ணம்,அன்னைபூபதி நினைவுக்கிண்ணம் போன்ற முக்கிய சுற்றுப்போட்டிகளில் ஆரம்ப நிகழ்வாகிய, கொடியேற்றல், கொடிவணக்கம், அகவணக்கம் நிகழ்வுகளின் போது, மைதானத்திற்கு வருகை தந்திருக்கும், வீரர்கள், கழகங்கள் மற்றும் அனைவரும் தமது சீருடைகளுடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம். குறிப்பாக நேரஅட்டவணையில் முதலாவதாக ஆட இருக்கும் அணிகள் இந்நிகழ்வில் பங்கு பற்றுதல் அவசியமாகும். தவறும் பட்சத்தில் குறித்த வீரர்கள், கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகமையிழந்தவர்களாக கருதப்பட்டு,அன்று நடைபெறும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படும்.

1. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் முதலுதவி ஏற்பாடு கட்டாயம் செய்திருத்தல் வேண்டும்.

2. சுற்றுப்போட்டிக்கான குழுத்தெரிவின் போது வேறு கழகத்தல் இருந்து குறைந்தது, ஒருகழக உறுப்பினராவது இருத்தல் அவசியம். எவரும் வருகை தராதபட்சத்தில் சம்மேளன உறுப்பினர் திரு முரளியுடன் Skype மூலம் அல்லது ஏதைிநச மூலம் தொடர்பு கொண்டு குழுத்தெரிவினை மேற்கொள்ளலாம்.

3. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் விளையாட்டு வீரர்களை மதுபானச்சோதனை (Alkocol test) செய்ய விரும்பின்,அதற்கான கருவியினை 15-சுவிஸ் பிராங்குகளை சம்மேளனத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4. சுற்றுப்போட்டியின் போது பெயர்ப்பட்டியல் பூர்த்தி செய்து வழங்கியபின் புதிதாக வீரரை இணைக்க முடியாது. ஆனால் வீரரின் சீருடை இலக்கமும் பெயரும் முதலில் எழுதியிருந்தால் அவ்வீரர் கையொப்பமிட்டு விளையாடலாம்.

5. நேர அட்டவனையின் படி போட்டிகள் நடத்தப்படல் வேண்டும் (இரண்டு 2 நிமிடங்களுக்கு பின் மைதானத்தில் உள்ள கழகத்திற்கு 3:0 வெற்றி வழங்கப்படும்).

6. சுற்றுப்போட்டியின் போது, அதனை நடத்தும் கழகம் குறைந்தது 4 பந்துகள் வைத்திருந்தல் வேண்டும்.
7. கழகங்கள் நடாத்தும் சுற்றுப்போட்டிகளின் மதிப்பெண்கள் சம்மேளன இணையத்தளத்திலும்,APP இலும் நேரஞ்சல் செய்யப்படும். இதற்கான செலவு 25- சுவிஸ் பிராங்குகள் ஆகும். இப்பணத்தினை சுற்றுப்போட்டியினை நடாத்தும் கழகமே செலுத்தவேண்டும்.
8. சுற்றுப்போட்டி தினத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் நேர அட்டவணையினை சம்மேளனத்திற்கு அனுப்பி வைத்தல்வேண்டும். தவறும் பட்சத்தில் நேரஞ்சல் செய்யப்படமாட்டாது.

9. சுற்றுப்போட்டியினை நடாத்தும் கழகம் தமது அறிக்கையுடன் நடுவரின் அறிக்கை,நடுவரின்பெயர்,தகுதி,முகவரி,தொலைபேசி,மின்னஞ்சல் என்பன இணைக்கப்படவேண்டும்.

10. ஆட்டத்தின் போது வீரர்களுக்கிடையில் ஏற்படும் தகராறினை நடுவர் தீர்த்து வைப்பார். மாறாக மூன்றாவது நபர் (விளையாட்டு வீரர் ஆதரவாளர் பயிற்சியாளர்) மைதானத்திற்குள் நுழைந்தால் மூன்றுமாதகாலம் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு நூறு சுவிஸ்பிராங்குகள் (100-CHF) குற்றப்பணமாகவும் அறவிடப்படும்.

11. அவசியம் இன்றி வீரரோ ஆதரவாளரோ மைதானத்திற்குள் நுழைந்தால் ஆறுமாதகாலம் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு இருநூறு சுவிஸ்பிராங்குகள( 200-CHF ) குற்றப்பணமாகவும் அறவிடப்படும்.

12. விளையாட்டுதிடலில் வீரர்களுக்குள் ஏதேனும் பிணக்கு ஏற்பட்டால் அல்லது சுற்றுப்போட்டியில் அமைதியின்மை உருவாக்கப்படுமானால் தொடர்புடைய கழகம் தடைசெய்யப்படுவதுடன். இருனூறு சுவிஸ்பிராங்குகள் (200-CHF) குற்றப்பணமாகவும் அறவிடப்படும

13. ஆட்டத்தின் போது மேலதிக வீரர் மைதானத்திற்குள் புகுந்து தாக்கினால் ஆறுமாதகாலம் சுற்றுப்போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு இருநூறு சுவிஸ்பிராங்குகள் ( 200-CHF ) குற்றப்பணமாகவும் அறவிடப்படும்.

14. ஆட்டத்தின் போது ஒரு வீரர் இன்னொருவீரரை தாக்க முயற்சித்தால் மூன்று மாதகாலம் சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுக்கப்படும்.

15. சுற்றுப்போட்டிகளில் நடுவரின் தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். இதில் ஆட்சேபம் கொள்ளும் அணிகள் அல்லது வீரர்கள் தமது கருத்தை சுற்றுப்போட்டி நடாத்தும் அமைப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும், மாறாக இது தொடர்பாக மைதானத்தில் கலகத்தில் ஈடுபடுதலோ அல்லது நடுவரின் தீர்ப்பை மீறி மைதானத்தை விட்டு வெளியேறுதலோ அனுமதிக்கப்பட மாட்டாது. அவ்வாறு நடந்துகொள்ளும் வீரர்கள் அல்லது அணிகள் **குறைந்தது** அன்றும் அடுத்து வரும் மூன்று சுற்றுப்போட்டிகளில் அவர்களது கழகம் தொடர்ச்சியாக கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

16. அணிகளின் பொறுப்பாளர்கள், பயிற்சியாளர்கள் அல்லது வீரர்கள் சுற்றுப்போட்டிகளின் போது எதிரணியினருடனோ, போட்டி ஏற்பாட்டாளர்களுடனோ, அல்லது நடுவர்களுடனோ வாக்குவாதம் மற்றும் தர்க்கத்தில் ஈடுபடும் பட்சத்தில் அவர்கள் **குறைந்தது** அன்றும் அடுத்து வரும் **மூன்று சுற்றுப்போட்டிகளிலும்** கலந்து கொள்ளும் வாய்ப்பினை இழக்க நேரிடும்.

17. மைதானத்தில் நடுவரின் தீர்ப்பை மீறி வீரர் ஒருவர் அல்லது அணியொன்று நடுவரைத் தாக்க முற்பட்டால் அவ்வீரர் குறித்த ஆட்டத்துடன் மைதானத்தை விட்டு வெளியேற்றப் படுவதுடன் குறித்த வீரர் **குறைந்தது ஒரு வருடகாலம்** சுற்றுப் போட்டிகளில். விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் . அத்துடன் அணியிடம் இருந்து SFR 250.- அபராதப் பணமாக பெறப்படும்.

18. விளையாட்டு வீரர்கள் தமக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டால் குறித்த வீரர்கள் குறித்த ஆட்டத்துடன் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன் **குறைந்தது ஆறுமாத காலம்** சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் அத்துடன் அவரிடம் இருந்து அபராதப் பணமாக SFR 200.- அறவிடப்படும்.

19. சம்மேளனம் அல்லது கழகங்கள் நடாத்தும் போட்டிகளில் வெளிநாட்டு அணிகள் பங்கு பற்றுவதாயின் அவரவர் நாடுகளில் உள்ள விளையாட்டுத்துறையின் உறுதிப்படுத்தல் அவசியம்.

20. அவ்வாறு கலந்து கொள்ளும் வெளிநாட்டு அணிகளின் பெயர் பட்டியலுடன் வதிவிட அனுமதி அட்டையின் பிரதியினையும் பெற்று சம்மேளனத்திற்கு அனுப்பிவைத்தல் அவசியம

**21. Kilchberg ல் உள்ள உள்ளரங்க மைதானத்தில் பார்வையாளர் பக்கத்தில் உள்ள சுவருடன் சேர்த்து விளையாடாமல் முன்னுள்ள சிவப்புக் கோட்டை வைத்தே விளையாட வேண்டும்.**

**22. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் சுற்றுப்போட்டி அறிக்கையை தமிழில் ஒரு வாரத்திற்குள் சம்மேளனத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்த சுற்றுப்போட்டி நடாத்துவதற்கான அனுமதி மறுக்கப்படும்.**

23. சம்மேளனத்தால் பார்வையாளர் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ தண்டனைக்காலம் முடியும் வரை சுற்றுப்போட்டிகளுக்கு வருகை தராமல் இருப்பதை குறித்த கழகமே உறுதிப்படுத்தவேண்டும்.தவறும் பட்சத்தில் தங்கள் கழகம் அச்சுற்றுப்போட்டியில் ஆடுவதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு தங்களுக்கான புள்ளிகளும் கழிக்கப்படும். சுற்றுப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கம் போது வெளியேற மறுத்து தொடர்ந்தும் பிரசன்னமாயிருந்தால் நிற்கின்ற ஒவ்வொருவருக்கும் தலா 5 புள்ளிகள் கழிக்கப்படுவதோடு தங்கள் கழகம் அடுத்து வரும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுப்பினையும் பெறும்.

24. தவிர்க்கமுடியாத காரணத்தால் தங்கள் கழகம் ஒரு சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளாத பட்சத்தில் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ அச்சுற்றுப்போட்டிக்கு வருகை தந்தால் ஒவ்வொருவருக்கும் தலா 5 புள்ளிகள் கழிக்கப்படுவதோடு தங்கள் கழகம் அடுத்து வரும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுப்பினையும் பெறும்.

25. பார்வையாளர் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ தங்களாலோ அல்லது தாமகவோ கழகத்தில் இருந்து விலகினாலோ அன்றி விலத்தப்பட்டாலோ எழுத்து மூலம் சம்மேளனத்திற்கு உறுதிப்படுத்தவேண்டும். தங்களால் விலக்கப்பட்டால் தண்டனைக்காலம் முடியும்வரை காவல்துறை ஊடாக சுற்றுப்போட்டி தடையினை விதித்து அதன் பிரதியினை சம்மேளனத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.தாங்களாக விலகினால் சம்மேளனம் காவல்துறை ஊடாக சுற்றுப்போட்டித் தடையினை விதிக்கும்.

26. சுற்றுப்போட்டி நடாத்தும் கழகம் சம்மேளனத்தால் பார்வையாளர் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ சமூகம் அளிக்கும் பட்சத்தில் அதனை சுற்றுப்போட்டி அறிக்கையில் இணைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் சுற்றுப்போட்டியினை நடாத்திய கழகத்திற்கு 3 புள்ளிகள் கழிக்கப்படும்.

27. பார்வையாளர் தடைவிதிக்கப்பட்ட கழகத்தின் பொறுப்பாளர் தமது கழகத்தால் நடாத்தப்படும் சுற்றுப்போட்டியில் சம்மேளனத்தின் அனுமதி பெற்று பார்வையாளராகவும் கழகத்தின் வேலைத்திட்டங்களிலும் பங்கெடுக்கலாம்.

28. ஒரு குழுவைச் சேர்ந்த இரு அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின்! அடித்த கோல்களில் இருந்து வாங்கிய கோல்களை கழித்தல். இதிலும் சமநிலையெனில்! அதிக கோல்களை அடித்த அணிக்கு முன்னுரிமை, இதிலும் சம நிலையெனில்! இரண்டு கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு முன்னுரிமை, இதிலும் சம நிலையெனில்! தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்படும்.

29. மூன்று அணிகள் சமநிலையில் இருப்பின் தலா 5 தண்டனை உதை வழங்கப்பட்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். தண்டனை உதையிலும் சமநிலை காணப்படின் அதிக கோல்களைப் போட்ட அணி தெரிவாகும்.

30. ஒரு சுற்றுப்போட்டியில் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெற்றால் அச்சம்பவத்துடன் தொடர்புடைய கழகங்கள் தங்களின் வாதத்தினை நான்கு நாட்களுக்குள் சம்மேளனத்திற்கு தமிழில் எழுத்து மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.தவறும் பட்சத்தில் சுற்றுப்போட்டி அறிக்கை,யாப்பு,சுற்றுப்போட்டிவிதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.